# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## அரையாண்டுத்தேர்வு - கல்வியாண்டு 2005 - 2006

## தமிழ்மொழி

## வினாத்தாள் - பகுதி 1

**ஆண்டு 6** **சுட்டெண்:..........................................** **நேரம்: 30நிமிடங்கள்**

**மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து கூடு இடப்பட்ட விடைத்தாளில், விடைக்கான இலக்கத்தின் மீது புள்ளடி இடுக.**

1. தமிழின் இனிமை காரணமாக அதற்கு வழங்கும் பெயர்களில் ஒன்று:

   (1) வண்டமிழ் (2) சங்கத்தமிழ் (3) தேன்தமிழ் (4) செந்தமிழ்

2. தமிழிலுள்ள உயிர்மெய்யெழுத்துக்களின் எண்ணிக்கை:

   (1) 247 (2) 216 (3) 12 (4) 18

3. முதிரை மலைப்பகுதியை ஆண்ட குமண மன்னன் ஒரு,

   (1) விஞ்ஞானி (2) பாடகன் (3) வள்ளல் (4) கூத்தாடி

4. அகத்தின் அழகு தெரியும் இடம்:

   (1) கண் (2) முகம் (3) தலை (4) கால்

5. ஆண், பெண் இரு பாலரையும் குறிக்கும் சொல்:

   (1) ஆண்பால் (2) பலர்பால் (3) பெண்பால் (4) ஒன்றன்பால்

6. எல்லாள மன்னன் ஆண்டநாடு:

   (1) இந்தியா (2) இலங்கை (3) மன்னார் (4) சீனா

7. மாமன்னன் எல்லாளனுடன் போர் புரிந்தவன்:

   (1) தீசன் (2) துட்டகைமுனு (3) சேனன் (4) குத்திகன்

8. முன் நிற்பவரைக் குறிக்கும் இலக்கணச் சொல்:

   (1) படர்க்கை (2) முன்னிலை (3) தன்மை (4) ஒருமை

9. தமிழ்ச் செல்வம் ஆகமாட்டாயா? எனப் பாடியவர்:

   (1) பாரதியார் (2) பாரதிதாசன் (3) கண்ணதாசன் (4) இரத்தினதுரை

10. ஒரு வாக்கியத்தின் இறுதியில் வரும் சொல்:

    (1) எழுவாய் (2) செயப்படுபொருள் (3) பயனிலை (4) முன்னிலை

11. சரியான சொல்:

    (1) தேனீர் (2) தேத்தண்ணீர் (3) தேநீர் (4) தேன்நீர்

12. கதிரவன் என்பதைக் குறிக்கும் சொற்கள்:

(1) நிலா , மதி (2) ஆதவன், நிலா (3) ஞாயிறு , வெய்யோன்

(4) அம்புலி , திங்கள்

13. இளமையிற் கல்வி சிலையில்,

(1) இருத்து (2) எழுத்து (3) கருத்து (4) உருத்து

14. புள்ளினங்கள் என்ற சொல் குறிப்பது:

(1) மிருகங்கள் (2) பறவைகள் (3) தாவரங்கள் (4) ஊர்வன

15. திருக்குறளை எழுதிய புலவர்:

(1) கம்பர் (2) திருவள்ளுவர் (3) பாரதியார் (4) காசிஆனந்தன்

16. தமிழரால் உயிரினும் மேலானதாகக் கருதப்படுவது:

(1) மானம் (2) தானம் (3) பானம் (4) கானம்

17. இலங்கைக்கு முதன் முதலில் வந்த ஐரோப்பியர்:

(1) ஒல்லாந்தர் (2) ஆங்கிலேயர் (3) போர்த்துக்கீசர் (4) யேர்மனியர்

18. யாழ்ப்பாணத்தை ஆண்ட கடைசித் தமிழ் மன்னன்:

(1) பண்டாரவன்னியன் (2) முத்தையன் (3) சங்கிலியன்

(4) செகராசன்

19. அழகர்சோலை என ஊர்ப்பற்றோடு அழைக்கப்படும் மலை:

(1) கதிரமலை (2) மயிலாடுமலை (3) இமயமலை (4) வடமலை

20. நாட்டார் பாடல்களைப் பாடியவர்கள்:

(1) நகர்புறமக்கள் (2) நாட்டுப்புறமக்கள் (3) பட்டினமக்கள்

(4) புலவர்கள்

21. உழவுத்தொழிலின் போது பாடப்படும் பாட்டு:

(1) அருவிவெட்டுப்பாட்டு (2) ஏர்ப்பாட்டு (3) சினிமாப்பாட்டு

(4) காவடிப்பாட்டு

22. நல்லவர் ஒருவர் இருப்பாரேல் அவருக்காகப் பெய்யும் மழை எல்லோருக்கும் பயன் தரும். இதைக் கூறிய புலவர்,

(1) சோமசுந்தரப்புலவர் (2) ஔவையார் (3) விபுலானந்தர்

(4) வள்ளுவர்

23. ஒரு பொருளின் செயலை உணர்த்தும் சொல்:

(1) பெயர்ச்சொல் (2) இடைச்சொல் (3) உரிச்சொல் (4) வினைச்சொல்

24. தமிழரிடமிருந்து குடியுரிமை, மொழியுரிமை, கல்வியுரிமை, வாழ்வுரிமையைப் பறித்தவர்கள்:

(1) சிங்களவர் (2) இஸ்லாமியர் (3) ஆங்கிலேயர் (4) பறங்கியர்

25. கீழேயுள்ள சொற்களில் இறந்தகாலம் குறிக்கும் சொல்:

(1) ஓடுகின்றார்கள் (2) ஓடினாள் (3) ஓடுவாள் (4) முயல்கின்றாள்

26. வாழை + பழம் என்பதைப் புணர்த்தி எழுதினால்:

(1) வாழைபழம் (2) வாழைப்பழம் (3) வாழையும்பழமும் (4) வாழைய்ப்பழம்

27. கத்தரிக்காய் என்பதன் சரியான பிரிப்பு:

(1) கத்திரியின்+ காய் (2) கத்தரிக்+ காய் (3) கத்தரி+ க்காய் (4) கத்தரி+ காய்

28. நாம் பிறருக்கு நன்மை செய்வோம். நன்மை என்பதன் எதிர்ச்சொல்:

(1) வன்மை (2) பன்மை (3) தீமை (4) சேய்மை

29. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள் என்பதன் பொருள்:

(1) காற்று வீசத் தூற்ற வேண்டும் (2) சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த வேண்டும்

(3) காற்றைச் சுவாசிக்க வேண்டும் (4) காற்றுடன் விளையாட வேண்டும்

30. சினைப்பெயர் குறிக்கும் சொல் ஒன்று:

(1) யாழ்ப்பாணம் (2) கண் (3) ஓடுதல் (4) கண்ணன்

(புள்ளிகள் 30)

# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

**அரையாண்டுத்தேர்வு - கல்வியாண்டு 2005 - 2006**

**தமிழ்மொழி**

**வினாத்தாள் - பகுதி 1**

**ஆண்டு 6** **சுட்டெண்:.........................................** **நேரம்: 30நிமிடங்கள்**

**பலதேர்வு வினாக்களின் கீழே தரப்பட்டுள்ள நான்கு விடைகளிலிருந்து மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து, இக் கூட்டுத்தாளில், அவ்விடைக்குரிய இலக்கத்தில் புள்ளடி (x) இடுக**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | 1 | 2 | 3 | 4 | 16. | 1 | 2 | 3 | 4 |
| 2. | 1 | 2 | 3 | 4 | 17. | 1 | 2 | 3 | 4 |
| 3. | 1 | 2 | 3 | 4 | 18. | 1 | 2 | 3 | 4 |
| 4. | 1 | 2 | 3 | 4 | 19. | 1 | 2 | 3 | 4 |
| 5. | 1 | 2 | 3 | 4 | 20. | 1 | 2 | 3 | 4 |
| 6. | 1 | 2 | 3 | 4 | 21. | 1 | 2 | 3 | 4 |
| 7. | 1 | 2 | 3 | 4 | 22. | 1 | 2 | 3 | 4 |
| 8. | 1 | 2 | 3 | 4 | 23. | 1 | 2 | 3 | 4 |
| 9. | 1 | 2 | 3 | 4 | 24. | 1 | 2 | 3 | 4 |
| 10. | 1 | 2 | 3 | 4 | 25. | 1 | 2 | 3 | 4 |
| 11. | 1 | 2 | 3 | 4 | 26. | 1 | 2 | 3 | 4 |
| 12. | 1 | 2 | 3 | 4 | 27. | 1 | 2 | 3 | 4 |
| 13. | 1 | 2 | 3 | 4 | 28. | 1 | 2 | 3 | 4 |
| 14. | 1 | 2 | 3 | 4 | 29. | 1 | 2 | 3 | 4 |
| 15. | 1 | 2 | 3 | 4 | 30. | 1 | 2 | 3 | 4 |

# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

**அரையாண்டுத்தேர்வு - கல்வியாண்டு 2005 - 2006**

**தமிழ்மொழி**

**வினாத்தாள் - பகுதி 2**

**ஆண்டு 6** **சுட்டெண்:..........................................** **நேரம்: 90நிமிடங்கள்**

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

**1. கீழேயுள்ள பந்திகளைப் படித்து வினாக்களுக்கு முழு வாக்கியத்தில் விடை எழுதுக.**

மனிதனின் மகிழ்வுக்காக இயற்கை அளித்துள்ள கொடைகளில் மலர்த்தாவரங்களும் ஒன்று. பற்பல வர்ணங்களில் பற்பல வடிவங்களில் மனதைக் கொள்ளை கொள்ளும் மலர்த்தாவரங்கள் உலகம் முழுவதும் காணப்படுகின்றன. அவற்றில் மலரும் மலர்களோ ஏராளம். பலமலர்கள் நறுமணம் மிக்கவையாகவும் சில நறுமணம் அற்றனவாகவும் காணப்படுகின்றன. இம்மலர்கள் மரம் , செடி , கொடிகளில் பூக்கின்றன.

எமது நாடுகளில் செடிப்பூக்களாக செவ்வரத்தை , நந்தியாவர்த்தை , றோசா , செவ்வந்தி , கனகாம்பரம் போன்றவையும் தரைக்கொடிப் பூக்களாக மல்லிகை , முல்லையும் நீர்க்கொடிப் பூக்காளாக தாமரை , அல்லி , ஆம்பல் , செங்கழுநீர் , நீரோற்பலம் என்பனவும் விளங்குகின்றன. மலர்கள் மாலைகள் கோர்ப்பதற்கும் கோயில்களில் பூசை செய்வதற்கும் இன்னும் பல தேவைகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றன. மலர்களிலே வண்டுகள் தேன் குடித்து மகிழ்ந்து ரீங்காரம் செய்கின்றன. அவை கூடுகளில் தேன் சேர்த்து வைக்கின்றன. மனிதர் அதன் கூடுகளை அழித்துத் தேன் எடுக்கின்றார்கள். தேன் சுவையும் சத்துமுள்ள பொருள். அத்தோடு மருந்துக்கும் பயன்படுகின்றது.

1. இயற்கை அளித்த கொடைகளில் ஒன்று எனக் கூறப்பட்டது எது?
2. மலர்கள் எவற்றிலிருந்து பூக்கின்றன?
3. செடிப்பூக்கள் எவை?
4. நீர்க்கொடிப்பூக்கள் நான்கு தருக.
5. மலர்களின் உபயோகங்கள் இரண்டு தருக.
6. தேன் கூடுகளில் தேன் சேர்த்து வைப்பவை எவை?
7. மனிதன் தேன் கூடுகளை ஏன் அழிக்கின்றான்?
8. தேன் எப்படிப்பட்ட பொருள் ?
9. வண்டுகள் எவற்றில் தேன் எடுக்கின்றன?
10. தேன் குடிப்பதால் வண்டுகளுக்கு என்ன ஏற்படுகின்றது?

**10 புள்ளிகள்**

## 2. கீழ்வரும் மூதுரைப் பாடல்களைப் படித்து, அதன் கீழுள்ள வினாக்களுக்கு முழு விடை எழுதுக.

நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார்சொல் கேட்பதுவும் நன்றே - நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று.

நெல்லுக்கு இறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்குமாங்கே பொசியுமாம்- தொல்உலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை.

1. மூதுரைப் பாடல்களைப் பாடிய புலவர் பெயர் என்ன?
2. யார் சொல் கேட்பது நல்லது?
3. நெல்லுக்கு இறைத்தநீர் வேறு எதற்கும் பயன் தருகின்றது?
4. நல்லவர் ஒருவருக்காகப் பெய்யும் மழை வேறு யாருக்குப் பயன்படுகின்றது?
5. நல்லவர்களுக்கு நிகராகக் கூறப்படுவது எது?

15 புள்ளிகள்

## 3. கீழ்வரும் பாடநூல் வினாக்களுக்கு முழு விடை தருக.

1. எல்லாள மன்னன் தன்தலைமேல் ஊர்தியை ஏற்றும்படி கட்டளை இட்டது ஏன்?
2. பசுப்பாலிலிருந்து பெறப்படும் உணவுப்பொருட்கள் எவை?
   பசுச் சாணம் எவை எவற்றுக்குப் பயன்படுகின்றது?
3. நாட்டார் பாடல்கள் எந்தெந்த வேளைகளில் பாடப்படுகின்றன?
4. ஆமை வீழ்ந்து இறக்க நேர்ந்தது ஏன்?
5. தமிழர்களது மூன்று பண்பாட்டுக் கூறுகள் எவை?

15 புள்ளிகள்

## 4. இடை வெளிகளை நிரப்பி எழுதுக.

1. தமிழர் என்றோர் இனமுண்டு தனியே அவற்கொரு ______________________________

2. ஒழுக்கம் விழுப்பம் தரலான் ______________________________
உயிரினும் ______________________________

3. சிறு ______________________________ துளி

4. துன்பம் நேர்கையில் ______________________________ இன்பம் சேர்க்க மாட்டாயா?

5. சித்திரமும் ____________________ செந்தமிழும் ____________________

(10 புள்ளிகள் )

## 5. கீழ்வரும் விடயங்களில் ஒன்றைத் தெரிவு செய்து, அதன் கீழுள்ள குறிப்புக்களின் உதவியுடன் நூறு சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை ஒன்று எழுதுக.

1. தமிழீழநாடும் விடுதலைப் போரும்
   தமிழீழத்தின் அமைவிடம் பரப்பளவு
   தமிழர் ஆட்சியும் காலப்பகுதிகளும்
   ஐரோப்பியர் வருகை தமிழர் ஆட்சி இழப்பு
   ஈழம் சுதந்திரம் பெற்றது. ஆட்சி சிங்களவரிடம் ஒப்படைப்பு
   சிங்கள ஆட்சியில் தமிழர் உரிமைகள் மறுப்பு
   அதற்கான போரும் இன்றைய நிலைப்பாடுகளும்

2. பூம்பனிக்காலம்
   இக்காலம் ஏற்படும் மாதங்கள்
   இலைகள் உதிர்தல் குளிர்
   பூம்பனிக் காலநிலைகள்
   மக்கள் செயற்பாடுகள்
   பனிக்காலக் காட்சிகள்

3. நான் தமிழ்கற்கும் பாடசாலை
   எங்கே உண்டு. நான் சேர்ந்த ஆண்டு கற்கும் ஆண்டு
   ஆசிரியர்கள், மாணவர்கள் தொகை, இயங்கும் வகுப்புக்கள், கற்கும் பாடங்கள்,
   தமிழ் கற்பதில் எனக்குள்ள ஈடுபாடு, தேர்வுகள்
   அங்கு நடை பெற்ற விழாக்கள்.

**20 புள்ளிகள்**